Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (05 - 03 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை 15

## 20 ஈராக்கிய வீரர்களை விஷஊசி ஏற்றி கொன்ற தாதி

(லண்டன்)

குவைத் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய தாதி ஒருவர் சிகிச்சைக்காக கொண்டுவந்த இருபது ஈராக்கிய இராணுவத்தினரை விஷ ஊசி மருந்தேற்றிக் கொன்றார். இந்தத் தகவலை அந்தத் தாதியே பிரித்தானிய தொலைக்காட்சியில் தெரிவித்தார். காயமடைந்த நிலையில் தம்மிடம் கொண்டுவரப்பட்ட இருபது ஈராக்கிய (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடா நாட்டில் சிறிலங்கா விமானப்படை அகோரக் குண்டு வீச்சு; 23பேர் உடல் சிதறிப்பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாடு பூராகவும் கோரத்தனமான விமானத் தாக்குதல்களை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று மேற்கொண்டன. இந்தத் தாக்குதல்களில் இருபத்துமூன்று அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறிய நிலையில் உயிரிழந்தனர். ஐம்பதிற்கும் மேற்பட்ட வீடுகள், கோயில்கள், கட்டடங்கள் சேதமாயின.

காலை 7-30 மணியிலிருந்து ஆரம்பித்த இந்தத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றன. வல்வெட்டித்துறை, அச்சுவேலி, புத்தூர், சுன்னாகம், கோண்டாவில், அரியாலை, வேலணை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. அனைத்துப் பகுதிகளிலும் வீடுகள், கோயில்கள், கடை கட்டடங்கள் என்பன சேதமடைந்ததால் பெருந்தொகையான மக்கள் வீடுவசதிகளை இழந்துவிட்டனர்.

## அரியாலையில் மூவர் பலி

அரியாலையில் முற்பகல் 9.30 மணிக்கு அகிலன் வீதியில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வி. பரமசாமி (வயது 65) இவரது மனைவி தவமணி (வயது 53) மகள் ஆனந்தகுமாரி வயது 22 ஆகியோர் ஸ்தலத்திலேயே (4 ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலில் ஒன்பதுபேர் பலி

கோண்டாவிலில் அரசடிப் பிள்ளையார் கோவிலடிப் பகுதி மீது காலை 9.30 மணியளவில் சிறிலங்கா விமானப்படையில் குண்டு வீச்சுத் தாக்குதல் நடாத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ப. சற்பத்திரன் (வயது 30), இவரது பிள்ளைகளான நிலோஜன் (வயது 5) நிலூஜன் வயது 4) நிவேதிக (வயது 2 ஆகியோரும் (4ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் ஐவர் பலி

சுன்னாகம் சிவன்கோவில் மேற்குப் பகுதியில் காலை 9-30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர். அத்துடன் ஐந்து வீடுகள், நான்கு கடைகள், இரண்டு தொழிற்சாலைகள், மூன்று கார்கள் பலத்த சேதமடைந்துள்ளன. (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறிலும் ஐவர் பலி

தொண்டமானாறு பகுதியில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் நடந்த குண்டு வீச்சுத் தாக்குதலில் ஜீ. மகேஸ்வரன் (வயது 39), கே. கமலாதேவி (வயது 41), என். பத்மினி (வயது 22), தயாராணி இன்னத்தம்பி (வயது 20), உசாராணி தளையசிங்கம் (வயது 22) ஆகிய ஐவரும் உடல் சிதறிய நிலையில் உயிரிழந்தனர்.

மேலும் இத்தத் தாக்குத (4 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் அதிர்ச்சி மரணம்

வேலணையில் 11-30 மணியளவில் விமானப்படையினர் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலின்போது செபமாலை (வயது 60) என்பவர் அதிர்ச்சி காரணமாக மரணமடைந்துள்ளார். க. அப்புத்துரை (வயது 26) என்பவர் படுகாயமடைந்தார். இந்தப்பகுதியில் இருந்த சில வீடுகளும் சேதமடைந்தன. (14) (15)

### அச்சுவேலியில்

அச்சுவேலிப் பகுதியில் நேற்றுக்காலை இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசியது. இந்தத் தாக்குதலில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை. ஒரு பேக்கரி, 2 கடை, ஒருவீடு ஆகியனவும் சேதமுற்றன. (82) (செ. த. மை.)

### புத்தூரில்

காலை 10-45 மணியளவில் புத்தூரில் வீசப்பட்ட குண்டுகள் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை சேதமாக்கியது. புடைவைக் கடை ஒன்றும் சேதமாகியது. உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. வே. யோகராசா (வயது 19) என்பவர் காயமடைந்தார். (ச) (82) (செ. த. மை.)

### வல்வெட்டித்துறையில்

பிற்பகல் 2-30 மணியளவில் விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சில் முனியப்பர் கோயில் சேதமுற்றது. த. சிவப்பிரகாசம் என்ற பொதுமகன் படுகாயமடைந்தார். (செ. த. மை.) (82)

## போரதீவில் புதிய முகாம்

(மட்டக்களப்பு)

பெரிய போரதீவு மரத்தடியில் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த 2ஆம் திகதி புதிய இராணுவ முகாமை அமைத்துள்ளனர்.

இது பற்றிய மேலதிக விபரம் தெரியவரவில்லை.

## இடி விழுந்து இருவர் பலி 8பேர் மயக்கம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்புக்கு அண்மையில் உள்ள வேணாவில் எனும் கிராமத்தில் இடி விழுந்ததால் அடைக்கலம், (4ஆம் பக்கம் பார்க்க)

## உடல்கள் சிதறிய நிலையில் சவச்சாலையில் சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

குடாநாடு பூராகவும் நேற்று விமானங்கள் நடாத்திய தாக்குதலால் கோரமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குண்டுவீச்சு நடைபெற்ற அனைத்து இடங்களிலும் உடல் சிதறிய நிலையில் உயிரிழந்தோர் மிக அதிகமாக உள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று ஒன்பது சடலங்கள் கொண்டுவரப்பட்டு சவச்சாலையில் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. சவச்சாலையில் உடல் சிதறிய நிலையில் அள்ளிக்கட்டி இரு சடலங்கள் காணப்பட்டன.

கோண்டாவிலில் அரசடிப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## எமக்குத் தொடர்பில்லை- புலிகள்

## புலிகள்மீதேசந்தேகம்-அதிகாரிகள்

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு இணைஅமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா கொல்லப்பட்டதற்கும் தமக்கும் தொடர்பில்லை என விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாளரான திரு. கிருஷ்ணகுமார் (கிட்டு) தெரிவித்ததாக பி.பி.ஸி. நேற்றிரவு அறிவித்தது. அதே வேளை ஆயிரக்கணக்கான தமிழர் படுகொலை செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்த அமைச்சர் ரஞ்சன் கொல்லப்பட்டமை தமிழருக்கு ஒரு தற்காலிக நிம்மதியைக் கொடுத்துள்ளதாகவும் கிட்டு அவர்கள் தெரிவித்ததாக மேலும் அச்செய்தி தெரிவித்தது.

அதேவேளை பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் விடுதலைப்புலிகள் தாம்செய்ய (4 ஆம் பக்கம் பார்க்க)

### மரண வீட்டில் பரிதாபம்

## இறந்த கணவன காலடியில் மனைவி உடல் சிதறிப் பலி

தொண்டமானாறு பகுதியில் கணவன் இறந்து போய்விட்டதால் இறந்த கணவனின் கால்மாட்டில் அழுது குளறிக் கொண்டிருந்த மனைவி கமலாதேவி குண்டுவீச்சில் உடல் சிதறி கணவனுடன் சேர்ந்து கொண்டார். சிறிது நேரத்தில் அந்த மரணவீடு இரத்தத்தால் தோய்ந்து இடிந்து போயிருந்தது. (25)

## வெளிநாடு செல்வோர் சொத்துக்கள் விடுதலைப் புலிகளால் பொறுப்பேற்பு

(நமது நிருபர்)

"வெளிநாடுகளுக்குக் குடும்பமாக செல்வோர்களுடைய சொத்துக்களை சமகால நெருக்கடி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பேற்கிறது" என தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசையும் சொத்துக்களாக இருந்தாலும் சரி, அசையாத சொத்துக்களாக இருந்தாலும் சரி அவை எமது இயக்கத்திடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் இவ்வாறு வெளிநாடுகளுக்கு குடும்பமாக சென்றவருடைய சொத்துக்களை யாராயினும் விலை (2ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் ஹர்த்தால்

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியில் நேற்றையதினம் சிறிலங்கா விமானங்களின் குண்டுவீச்சுக்குப் பலியான பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இன்று சகலவர்த்தக நிலையங்களையும் மூடிப் பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படி சகல வர்த்தகர்களுக்கும் சுன்னாகம் வர்த்தக சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## வீமன்காமத்தில் மோதல்

(யாழ்ப்பாணம்)

வீமன்காமம் இராணுவத்தினர் மேலும் முன்நோக்கிவர முற்பட்டபோது விடுதலைப் புலிகள் அவர்களை எதிர்த்து அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் இராணுவத்தரப் (4ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சலி

சனிக்கிழமை கார்க் குண்டு வெடிப்பில் மரணமடைந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### ஸாயிராம்

சத்யசாயிபாபா கூற்றுப்படி அவருடைய முன்னைய அவதாரம் ஷீரடி சாயி பாபா வாழ்க்கை உண்மைகள் வழங்குவது ஞானயக்ஞம் 388 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (R 1141)

### கொழும்பு ஸ்ரூடியோ

புளொக் (Block) புகைப்படம் றபர் சீல், கலர்ப்படம், ஓவியம், பிறேம் போடுதல், கலர் பிலிம் சுருள்கள் ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள் கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம்.

(R-2090)

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கலட்டைப்பிரா ய் பகுதியில் 10 பரப்புக் காணியும் நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக் கூடிய 4 1/2 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. லேத் மிஷின்கள், தகடு வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- பாஸ்கோ ஸ்தாபனம், முத்திரைச்சந்தை நல்லூர். (B-2097


இராணுவ நடவடிக்கையால்

# பாதிப்படைந்த மக்கள் அனைவரும் உடன் தகவல் அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான தமிழீழ மக்கள் அனைவரும் தமது விபரங்களைக் கோப்பாய்ச்சந்தியில் அமைந்துள்ள மக்கள தொடர்பக மான செய்தித் தகவல் மையத்திற்கு உடனுக்குடன் அறிவிக்குமாறு மேற்படி தகவல் மையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்நிலையம் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான வீடுகள், சொத்துகள், கோவில்கள், பொது ஸ்தாபனங்கள், வர்த்தக நிலையங்கள், அரச, மற்றும் கூட்டுத்தாபனங்கள், உணவு உற்பத்தி பாதிப்புகள், அவற்றின் அழிவுகள் அதற்கான காரணங்கள், கைத்தொழில் பாதிப்பு தொழிற்சாலையின் சேதங்கள், பாதிப்புகள் என்பவற்றைத் திரட்டி வருகிறது.

இவ் விபரங்களையும்வெளி நாடுகளுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தப்பட்டு வருவதுடன், இவர்களுக்கான உதவிகளைப் பெறுக்கொடுப்பதற்கு இந் நிலையம் பல வெளிநாட்டு நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு வருகிறது.

எனவே இவ்வாறான பாதிப்புக்குள்ளானவர்கள் தத்தமது பகுதியிலுள்ள செய்தித் தகவல்மைய நிருபர்களிடம் முழு விபரங்களையும் தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இதேபோல யுத்த நடவடிக்கைகளால் பாதிப்புற்ற சகல பொதுஸ்தாபனங்களையும், அரச, கூட்டுத்தாபனங்களையும் தம்முடன் தொடர்பு கொண்டு சேத விபரங்களை அறியத்தருமாறு செய்தித்தகவல் மையம் கேட்டுள்ளது.

அத்துடன் நிருபர்கள் இல்லாத பகுதியில் நிருபர்கள் நியமனமும்நடைபெறவுள்ளது இதற்கெனஅப்பகுதியிலுள்ள படித்தவர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இந் நிலையம் வேண்டுகிறது. இவர்களின் சேவைக்குரிய பணம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலவச விதைகள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலம் காப்போர் சங்கத்தினரால் வறிய விவசாயிகளுக்கு இலவசமாக விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறுதானிய விதைப்புக்காக வழங்கப்பட்டு வரும் இவ்விதைகள் சனசமூக நிலையங்களுக்கூடாக விநியோகிக்கப்படுகின்றன. கடந்த 3 ஆம் திகதி நயன்மார்கட்டு சனசமூக நிலையத்தில் 26 விவசாயிகளுக்கு இவ்விதம் இலவச விநியோகம் இடம்பெற்றது. கிராமசேவையாளரின் சிபாரிசின் அடிப்படையிலேயே இவ்விநியோகம் நடைபெற்றது.


## கண்ணீர் அஞ்சலி

சிறிலங்கா அரசின் விமானப் படையின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு 4-3-91இல் பலியான வட ஈழம் சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் அரியாலைப் பகுதி கண்காணிப்புக் குழு உறுப்பினர் திரு. வீ பரமசாமி, அன்னாரது துணைவியார் திருமதி ப. தவமணி, புதல்வி செல்வி ஆனந்தகுமாரி ஆகியோருக்கு வட ஈழம் சிகை அலங்கரிப்பாளர் சங்கம் தனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் வண்ணம் இன்று மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சிகையலங்கரிப்பு நிலையங்கள் அனைத்தும் மூடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறது.

வடஈழம்

(R/1152) சிகையலங்கரிப்பாளர் சங்கம்

## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கில நாவல்களை தமிழில் இலக்கியத்தரம் குன்றாது மொழிப்பெயர்ப்புச் செய்வதற்கு மொழி பெயர்ப்பாளர்கள் தேவைப்படுகின்றார்கள் அலுவலகத்தில் மொழி பெயர்ப்புச் செய்வதற்கு அல்லது வீட்டில் இருந்து கொண்டே மொழி பெயர்ப்புச் செய்வதற்கு தகுதியுடைய மொழி பெயர்ப்பாளர்கள் வேண்டப்படுகின்றார்கள். சகல விபரங்களுடனும் இம் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 111 பே/ ஈழநாதம்

(R-1149) 31, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம்.

★ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
★ றபர் சீல்
★ HALFTONE - LINE - கலர் புளொக்ஸ் (BLOCKS)
★ கலர் பிலிம சுருள்கள்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம் சுருள்களை படமாக்குதல்-பெருப்பித்தல்
★ பிறேம் போடுதல்
★ ஸ்ரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

### கொழும்பு ஸ்ரூடியோ

55, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
245, நாவலர் வீதி - யாழ்ப்பாணம் (B-2091)


## கருத்தரங்கு

(குருநகர்)

90 ஆம், 91 ஆம் கத்தோலிக்க - கிறிஸ்தவ மாணவர்களுக்கான உயர்தர கிறிஸ்தவ பாடக் கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வண.சந்திரகாந்தன் அடிகள் கருத்தரங்கை நடத்துவார்.

காலை 8-45 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும். முழுநாள் கருத்தரங்கை யாழ். பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது. (21)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

Applications will be received by me from suitable candidates for the following posts up to 1991.04.24.

| POST | SALARY |
|---|---|
| 1. Director of Physical Education (Age not more than 45 years) | — Temporary Rs. 6000/- fixed per month |
| 2. Public Health Inspector (Age not more than 40 years.) | — Temporary Rs. 2085/- fixed per month + (Variable cost of living allowance and other allowances be paid) |

Application forms and particulars for the above post should be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments of this University.

Request for application forms for the above post should be accompanied by a self — addressed stamped envelope of 23 × 10 c.m. in size.

Applications from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Head of the Institutions.

NOTE: Appointment on Contract also will be considered for the above posts.
(Age limit is not applicable for contract appointments)

Applications received after the closing date and the applications on which the particulars are stated illegibly will be rejected.

University of Jaffna, —REGISTRAR
Thirunelvely,
Jaffna.
1991-01-27 (B. 2096)


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து வாங்குவதோ, பொறுப்பெடுத்து வைப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக வெளி நாடுகளுக்குக் குடும்பமாகச் சென்றவர்களுடைய சொத்துக்களை யார் விலை கொடுத்து வாங்கினாலும், அது அங்கீகரிக்கப்படமாட்டாது. ஆகவே இதுவரை வெளிநாடுகளுக்கு குடும்பமாகச் சென்றிருப்போரின் சொத்துக்களை வாங்கியிருப்போர் பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எமது வட்ட அல்லது மாவட்ட காரியாலயங்களில் எழுத்து மூலமாக விபரங்களை எழுதிக் கொடுத்து அதன் பிரதியை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.

இதற்கான விபரங்களைத் தெரிவிப்பதற்கான படிவங்களை வட்ட காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம் என்றும், நீங்கள் நிரப்பிக்கொடுக்கும் அந்தப் படிவங்கள் பரிசீலனை செய்யப்பட்ட பின் மீண்டும் நாம் தேவை ஏற்படும் போது உங்களுடன் தொடர்பு கொள்வோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




நினைவு கூருகின்றோம்

### மார்ச் 5

1986ஆம் ஆண்டு இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரமரணமடைந்த
**சுதாகர்** (சுப்பிரமணியன் - பம்பைமடு, வவுனியா)
1987ஆம் ஆண்டு தற்செயலான வெடிவிபத்தில் மரணமடைந்த
**கமல்** (க. கிறிஸ்துராசா - பருத்தித்துறை)
**நிருபன** (வெ. இதயவேல் - வவுனியா)
1989ஆம் ஆண்டு குமுழமுனையில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த
**லெப். சூரன்**
(அருணாசலம் சுரேந்திரராசா - புதுக்குடியிருப்பு)
இதே ஆண்டு வீரமரணமடைந்த
**நிசாந்தன்** (யோகரத்தினம் பிரதாபன் - வல்வெட்டித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இத் தியாகிகள்!
மலர்களினால்...
அர்ச்சிக்கப்பட வேண்டியவர்கள்
இல்லை! இல்லை!
நம் இதயங்களில்...
வைத்து
பூஜிக்கப்பட வேண்டியவர்கள்

(த. சிவநந்தியின் "பூஜிக்கப்பட வேண்டியவர்கள்" என்ற கவிதையில் இருந்து)

- விடுதலைப்புலிகள்
(B-2095) மக்கள் முன்னணி

## ✻ சிந்தனைக்கு ✻

தன் அண்டைவீட்டுக்காரனிடமிருந்து திருடுபவனுக்கு, புவியின் நான்கு மூலைகளிலும், இந்த மூன்று பெயர்களில் ஒன்று தரப்படுகிறது. கள்வன், கொள்ளைக்காரன், அல்லது ஆங்கிலேயன்.

— லா டிரயடே தெ லேங்லே (1572)


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 05-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05


## ஹிட்லரை உருவாக்கிய ஏகாதிபத்தியவாதிகள்

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் நடந்த பெரும் போர் முடிந்துவிட்டது போர் நிறுத்தம் என்று குறிப்பிடாமலே போர் நிறுத்தம் தொடர்பாக ஐ நா. சபையில் அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின் மூலம் ஐ நா. சபையின் அனுமதியுடன் அமெரிக்கா ஈராக மீது போர் தொடுக்கும் உரிமையைப் பெற்றுள்ளது. இது ஈராக்கை மிகவும் சிறுமைப்படுத்தும் 'ஐ நா. சபையின்' தீர்மானமாகும்; மூன்றாம் உலக நாடுகள் இத்தீர்மானத்தை எதிர்த்தபோதும் அவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இராணுவத் தளபதிகள் மட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தையிலும் அமெரிக்காவின் நிபந்தனைகளை ஈராக் முழுமையாக ஏற்றுக்கொண்டது; ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டது.

ஐ நா. சபையும் சரி, அமெரிக்காவும் சரி இன்று ஈராக்கிற்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு செயற்படுவது ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிரான நடவடிக்கை மட்டுமல்ல ஈராக் மக்களுக்கும் எதிரான நடவடிக்கை என்பதையும் மறந்துவிடக்கூடாது. போருக்கான முழுப் பொறுப்பையும் ஈராக்கிடம் சுமத்தி பெருந்தொகை நஷ்ட ஈட்டையும் ஈராக்கிடம் இருந்து பெறுதல அமெரிககாவின் திட்டமாகவுள்ளது.

அதேவேளை ஈராக்மீது இருக்கும் பொருளாதாரத்தடை, அகற்றப்படாமலும் யுத்தத்தினால் ஈராக்கின் சமுகபொருளாதாரக் கட்டமைப்புக்கள் அழிக்கப்பட்ட நிலையிலும், ஈராக்கின் ஆள்புலப் பரப்பில் இராணுவத்தை வைத்துக் கொண்டும் ஈராக் மீது மேற்கொள்ளப்படும் திணிப்புக்கள் இன்று சதாம் ஹுசைனுக்கு எதிராக ஈராக் மக்களை திருப்பிவிடக் கூடியதாக இருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில் மக்களின் சீற்றம் ஈராக்கை அழித்தொழித்த அமெரிக்காவினதும், அதன் கூட்டாளிகளினதும் மீது திரும்பும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை; வரலாறும் இதைத்தான் போதிக்கின்றது.

இன்று ஈராக் மீது மேற்கொள்ளப்படும் திணிப்பானது 1919 ஆம் ஆண்டு உலக மகாயுத்தத்தில் ஜேர்மனி தோற்று நின்றபோது அதன்மீது மேற்கொள்ளப்பட்ட திணிப்பிற்கு எந்தவித குறைவும் அற்றதாகும். அன்று வேர்சைஸ் உடன்படிக்கையின்பிரகாரம் ஜேர்மன் ஆள்புலப்பரப்பினுள் அல்சாஸ். லோறன்ஸ், பிரான்ஸ் படைகள் சரி பாதி அனுமதிக்கப்பட்டன. இதன் மூலம் வளமான சில பகுதிகள் பிரான்சிடம் வந்தன. பெருந்தொகையான பணம் நஷ்ட ஈடாக அறவிடப்பட்டது.

அதேவேளை அன்றைய உலக அரசியல் சூழ்நிலையும் இன்றைய நிலையை ஒத்ததாகவே காணப்பட்டது: அன்று சோவியத் உலக விவகாரங்களில் இருந்து விலகி நின்றது. மூன்றாம் உலகம் முழுவதும் காலனியாதிக்கவாதிகளின் கீழ் முடங்கிக் கிடந்தது. இன்றும் சோவியத் உலக விவகாரங்களில் இருந்து பெருமளவு ஒதுங்கியே நிற்கின்றது. மூன்றாம் உலக நாடுகள் தமது பிரச்சினைகளில் மூழ்கிப்போய் கிடப்பதோடு அவர்களின் குரல் ஐ நாடு சபைகளின் காதுகளில் கேட்பதாகவும் இல்லை அதேவேளை இரண்டாம் உலக மகாயுத்தத்தில் வெற்றி பெற்ற இரண்டு அணிகள் இருந்தன. ஆனால் முதலாம் உலகப் போரில் வெற்றி பெற்றஅணி ஒன்று இருந்ததுபோல் இன்றும் வெற்றி பெற்ற அணி ஒன்றே இருக்கின்றது.

முதலாம் உலக மகாயுத்த முடிவில் ஜேர்மனியில் திணிக்கப்பட்ட பொருளாதாரச் சுமையால் ஐரோப்பாவிலேயே வளம்மிக்க நாடான ஜேர்மனி வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தது, நாடு பொருளாதாரரீதியில் மீள முடியாது தத்தளித்தது. இந்நிலையில்தான் ஹிட்லர் ஜேர்மனியில் உருவாகினான். அன்றைய ஜேர்மனிக்கு காலனியாதிக்க ஆட்சியாளருக்கு எதிராக ஒருபலமானதும், உறுதியானதுமான தலைமை தேவைப்பட்டது, அந்நிலையில் ஜேர்மனியில் ஹிட்லரை உருவாக்கியவர்கள் ஏகாதிபத்தியவாதிகளே ஒழிய ஜேர்மனியர்கள் அல்ல. ஆகையினால் இரண்டாம் உலகப் போருக்கும் இவர்களே பொறுப்பு.

இந்நிலையில், இன்று ஈராக் மீது திணிக்கப்படும் சுமைகள். நெருக்குதல்கள் ஈராக் மக்களை பழிதீர்க்கும் நிலைக்குத் தள்ளுமே ஒழிய ஒருபோதும் சமாதான வழிக்கு இட்டுச் செல்லப்போவதில்லை.

உலக அணுவல்லரசுகளுக்கிடையில் மூன்றாம் உலக மகாயுத்தம் ஒன்று மூளுமா என்று இதுவரை கேட்டு வந்தவர்களுக்கு மூன்றாம் உலக மகாயுத்தம் ஒன்று உலகில் நடக்கலாம் என்பதை வளைகுடாப் போர் உணர்த்தியுள்ளது ஆனால் அதில் அணுவல்லரசுகள் மோதிக்கொள்ளாமல் இருக்கலாம்.

ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் இருந்தே மேற்குலக அரச வல்லரசுகளுக்கு எதிராக இப்போர் மூளலாம் இந்நிலை உருவாகாமல் இதைத் தடுப்பதும், ஊக்குவிப்பதும் மேற்கு வல்லரசுகளின் குறிப்பாக அமெரிக்காவின் கையிலேயே உள்ளது.

## அஸாம் அல்ல அஸோம்

1990ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 7ஆம் திகதி அஸாமின் கிராமப்புறம் எங்கும் அஸோம் ஐக்கிய விடுதலை முன்னணியின் 11ஆவது ஆண்டு நினைவு நாள் போர்க்குணத்துடன் கொண்டாடப்பட்டது. இம்முன்னணியின் அங்கத்தவர்கள் ஆயுதபாணியாகி, சீர் உடை தரித்து படைஅணி நடத்தினார்கள்; முன்னணியின் கொடியேற்றமும் நடைபெற்றது. அனைத்துப் பத்திரிகையாளர்களும் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தார்கள். அஸாம் பொலிஸ் எந்த நடவடிக்கையும் இன்றி வாழாவிருந்தது: முன்னணியின் தலைவர் அறபிந் ஐக்ஹோவாவின் அறிக்கை நாடெங்கும் படிக்கப்பட்டது: அதில் சில வாசகங்கள்; ''நாம் சுரண்டப்படுவதையும், சுதந்திரமற்றிருப்பதையும், அடிமைப் படுத்தப்படுவதையும் விரும்பவில்லை. ஆகவே அஸோமில் இன்று நடைபெறும் ஏமாற்று அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்தியா அஸோமை அஸோமிய மக்களிடமே ஒப்படைக்கட்டும்; ஒரு அயல்நாடு என்ற முறையில் இந்தியா அஸோமுடன் ஒரு வெளிநாட்டுத் தொடர்பு வைத்திருக்கலாம். ஆனால், காந்திய போர்வையின் கீழ் இந்தியா அஸோம் மீதான தனது பிடியையும் தனது காலனியல் சுரண்டல் கொள்கையையும் தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்ளவும் விரும்புமானால், அஸோம் யுத்தக் களமாக மாறுவது தவிர்க்க முடியாது'...'

கடந்த 11வருட காலத்தில் இந்திய ஆயுதப் படையுடன் எதுவித மோதலையும் மேற்கொள்ளாத இந்த அஸோம் தேசிய விடுதலை முன்னணி, அஸாம் மாநிலத்தின் அனைத்து மக்களின் வாழ்க்கையிலும் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றது. சிவில் நிர்வாகத்தை நடத்துவதில் இதுவே தீர்மானகரமான சக்தியாக இருக்கின்றது. சித்திரை வருடப்பிறப்பு அஸாமில் விமரிசையாக கொண்டாடப்படும் ஒரு பெருநாளாகும். இக் கொண்டாட்டத்தில் அஸோம் மக்களின் தேசிய கலாசாரம் வளர்க்கப்படக் கூடிய விதத்திலான கிராமிய கூட்டு நடனங்கள் நெறிப்படுத்தப்பட்டு மேடையேற்றப்பட்டன. விடுதலை முன்னணியே இந்த நடவடிக்கைக்கான வழிகாட்டலைவழங்கியது. நகர்ப்புறத்திலும் விடுதலை முன்னணி கேட்டுக்கொள்ளப்பட்ட முறையிலேயே இது நடைபெற்றது.

அஸோம் தேசிய விடுதலை முன்னணியால்(ULFA) அஸாம் என்று இந்தியாவால் திரித்துக் கூறப்பட்ட அஸோம் பிரதேசத்தினை தன்னாதிபத்தியமுள்ள அஸோம் என்றே அழைக்கின்றது; அஸோம், பல இனக் குழுக்களையும், மலைஜாதி மக்களையும், குடியேற்றப்பட்டவர்களையும் உள்ளடக்கிய ஒரு தேசம் என்பதே இவர்களின் சித்தாந்தமாகும்.

பர்மாவில் உள்ள 'மயன்மவின் கச்சின் அரசின்' கச்சின் சுதந்திர இராணுவத்திடம் இருந்தும் 'நாகலாந்து சோஷலிஸ்ட் கவுன்ஸிலிடம் (NSCN)' இருந்தும் பயிற்சியும், உதவியும் பெறுகின்றார்கள் NSCN உடனும், மணிப்பூர் விடுதலை அமைப்புக்களுடனும் அமைப்பு ரீதியான தொடர்புகள் வைத்துள்ளார்கள்.

அஸாமிய மக்களின் உரிமைக்காக கிளர்ச்சி நடத்தும் அனைத்து அஸாம் மாணவர் அமைப்பு (AASU, அனைத்து க்றவ்ஹட்டி மாணவர் அமைப்பு (AAGUS) (அஸாமின் பிரதான நகரமே றவ்ஹட்டியாகும்), அனைத்து அஸாம் கணசங்கிராம்பரிஷத் (AAGSP) ஆகிய அமைப்புகளுடன் இவர்கள் சித்தாந்தரீதியில் முரண்படுகிறார்கள். அஸோம் ஒரு தனிநாடு என்பதும், போராட்டம் அஸாமிய மக்களுக்கானது அல்ல (அஸாமியர்கள் ஒரு மொழிவழி இனம்) அஸோமின் அனைத்து இனக்குழுக்களுக்கானது என்பதுவும், நேபாளிய, கிழக்கு வங்காள குடியேற்ற வாசிகளும் அஸோம் பிரஜைகளாக

**காந்தன்**

ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதுவுமே ULFA யின் சித்தாந்தமாகும் முன் சொன்ன அமைப்புகள் அஸாமியரின் நலனை மாத்திரமே முன்வைக்கின்றன. இந்திய அரசியல்நீரோட்டத்துள் தாம் வரமாட்டோம் என்பது ULFAயின் அடுத்த சித்தாந்தமாகும் ULFA இரு கட்ட புரட்சி பற்றி பிரஸ்தாபித்து வருகின்றது: 1வது கட்டம் அஸோமின் தேசிய விடுதலை, இரண்டாவது கட்டம் அஸோமின் சமூக புரட்சி அதாவது சோஷலிஸப் புரட்சியாகும்.

1985டிசம்பர் மாதம் AASU வும், AAGSPயும் இணைந்து அஸோம் கணபரிஷப் கூட்டு (AGP) அரசை அமைத்தது.

AGP அரசு ULFAக்கு எதிராக செயற்படவில்லை எதிர்த்து செயற்பட முடியாத நிலை; அஸாம் மாநில பொலிஸார் AGP அரசின் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டு வந்தார்கள். AGP அரசு பொலிஸாருக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸாருக்கும் AGP அரசிற்கும் இடையேயான முரண்பாடு வளர்ச்சியடைந்து வந்தது. AASU படிப்படியாக ULFA க்கு ஆதரவாகவே செயற்படஆரம்பித்தது.

1989 ஒக்ரோபர் 9 ஆம் திகதி ULFA அங்கத்தவர் ஒருவர் சுடப்பட்டார் அதைக் கண்டித்து நகரில் பகிரங்க மரண ஊர்வலம் ஆயுதபாணியாக நடைபெற்றது. AASU வும் இதை வெளிப்படையாக ஆதரித்தது பகிரங்கமாக பந்திற்கு (ஹர்த்தால்) அறிவித்தது 1990 ஜனவரி மாதம் ULFA ஐ கண்டித்து வர்த்தகர்கள் பந்த் அனுஷ்டித்தார்கள். AASU விசுவ மாணவ தொண்டர்கள் பந்தை உடைத்தார்கள். AGP அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. AGP அரசிற்கும் மத்திய அரசிற்கும் இடையேயான முரண்பாடு மேலும் கூர்மை அடைந்தது.

விளைவு... 1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் AGP அரசு கலைக்கப்பட்டது; இந்தியராணுவம் மற்றோர் யுத்தக்களத்தை திறந்து வைப்பதற்காக அஸாமினுள் பிரவேசித்தது அது அஸாமாகவே இருக்குமா அல்லது அஸோம் ஆகுமா வரலாறு தான் தீர்மானிக்க வேண்டும்.

## மாமலை சாய்ந்தது ரெலோ அனுதாபம்

★ ''அரசியல் அரங்கின் ஒரு மாமலை எனத் திகழ்ந்த கம்பீரமான நெடிய தோற்றமுடைய ரஞ்சன் விஜேரட்னா நம்மிடையே இல்லை என்பதை இன்னமும் நம்ப முடியாமல் இருக்கிறது'' என ரெலோ தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

★ ''மோதிலால் நேருவும் நானும் ஒரு நல்ல நண்பனை இழந்து விட்டோம்'' என இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார்பொன்னம்பலம் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். உயரிய கோட்பாடுகளைக் கொண்ட கண்ணியமான ரஞ்சன் விஜேரட்னா அரசியலில் பிரவேசித்ததும் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் நடந்து கொள்ள வேண்டி இருந்தது என்றும் அந்தச் செய்தியில் குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

★ ''உடல் அழிந்தாலும், உயிரின் செயல்பாடு எம நாட்டைக் காக்கும் வலுவை எமக்கு வழங்கும்'' என்று கல்வி ராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் தனது அனுதாபத்தை தெரிவித்தார்.

★ ''அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா அரசாங்கத்திற்கும், தமிழ் பேசும் குழுக்களிடையேயும் இணக்க நிலை தொடர்பாகவும், தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆர்வமுடன் இருந்ததையும்இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது பொருத்தமானதாகும்'' என்று ஈ என். டி.எல்.எவ் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## ஈராக் இராணுவத்தினரின் தொகையைக் குறைக்க முடிவு

(பாக்தாத்)

ஈராக்கிய இராணுவத்தில் இருந்து 35 வயதிற்கும் 38 வயதிற்கும் இடைப்பட்ட ராணுவத்தினரை விலக்கிக்கொள்ள ஈராக் முடிவு எடுத்துள்ளது. போர் முடிவைக் குறிக்கும் முகமாக ஈராக்கியஜனாதிபதி சதாம் ஹுசைனினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பாக்தாத் வானொலி அறிவித்தது.

அத்துடன் இதற்கான உத்தரவில் புரட்சித் தலைமைச் சபையின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி சதாம் ஹுசைன்கையெழுத்திட்டுள்ளதாகவும் பாக்தாத்வானொலி கூறியது.

இதேவேளை ஈராக்கில் உள்ள அனைத்து கல்வி நிலையங்களும் அடுத்தவாரம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ஈராக்கிய கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது.

## ஜோர்ஜ் புஷ் பிரேமாவிற்கு அனுதாபம்

(வாஷிங்டன்)

சிறிலங்கா பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரட்னாவின் படுகொலை குறித்து ஆழ்ந்த வேதனையை வெளியிடும் செய்தியொன்றை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதேவேளைஇந்தியா, பாகிஸ்தான் மாலைதீவுத்தலைவர்களும் அமைச்சர் ரஞ்சனின் மறைவுக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

## ஈராக் தூதர் மறுப்பு

(ஜெனிவா)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அல்ஜீரியாவில் அரசியல் தஞ்சம் புகுந்திருப்பதாக பிரான்ஸ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது இச்செய்தியை ஐ.நா.வுக்கான ஈராக் தூதுவர் அலி அம்பாரி மறுத்துள்ளார்.

# பாலஸ்தீன மக்களுக்கு ஒரு நாடு; சதாம் இதற்காகவே போராடினார்

**— மித்தரோங்**

(பரிஸ்)

"பாலஸ்தீன மக்களுக்கு ஒரு நாடு அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் போராடியிருக்கிறார்" என பிரான்சிய ஜனாதிபதி மித்தரோங் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரான்சில் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் பாலஸ்தீன மக்களின் பிரச்சினை குறித்து தெரிவிக்கும் போது அவர்களுக்கென ஒரு நாடு அவசியம் என்றும் இதற்காக ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனும் போராடியிருக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மத்திய கிழக்கின் எதிர்காலம் குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபை பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதே வேளை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்ய முன்னர் பாலஸ்தீன பிரச்சினை தொடர்பாக அரசியல் வாதம் ஒன்றை நடத்துவதற்கு இஸ்ரேலிய பிரதமர் சமீர் ஒத்துக் கொண்டுள்ளார்.

## பாலஸ்தீனியர்கள் மீது குவைத்தில் பழிவாங்கல்

(ரியாட்)

குவைத்தில் வாழும் பாலஸ்தீனியர்கள் துன்புறுத்தப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பாலஸ்தீனியர்கள் ஈராக்கிற்கு ஆதரவளித்தார்கள் என்ற காரணத்துக்காக, அவர்கள் குடியிருப்புக்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாலஸ்தீனியர்களின் அடையாள அட்டைகளையும் பன்னாட்டுப் படையினர் கடும் சோதனை செய்து வருகின்றனர்.

# வளைகுடா நிலைமை

★ 1949 ஆம் ஆண்டின் மூன்றாவது ஜெனிவாக் கோட்பாட்டின்படியும், பரஸ்பர அடிப்படையிலும் போர்க் கைதிகளைப் பரிமாற்றம் செய்யத் தான் தயார் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஈராக் தெரிவித்துள்ளது. இதே நேரம் ஒரு பெண் உட்பட பத்து கூட்டுப்படைப் போர்க் கைதிகளை ஈராக் நேற்று முன்தினம் விடுதலை செய்ததாக ஐ. நா. சபைக்கான ஈராக்கிய தூதுவர் தெரிவித்தார்.

★ ஈராக்கிற்கு எதிரான இராணுவ, பொருளாதாரத் தடைகளைத் தொடர்ந்து பராமரிப்பதென்றும், ஆனாலும் அந் நாட்டிற்கான மனிதாபிமான உதவிகளான மருத்துவ, சுகாதார, உணவுத் தேவைகளை நிறைவேற்றுவது விரைவுபடுத்தப்படுமென்றும் ஐ. நா. பாதுகாப்புச்சபை தெரிவித்துள்ளது.

★ அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் ஈராக்கிய மக்கள் மீது நடாத்திய கொடுமையான தாக்குதல்கள் பற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள் குறிப்பிடவில்லை என்று ஈராக்கிய வெளியுறவுத் துறை அமைச்சர் தாரிக் அசீஸ் குற்றஞ் சாட்டியுள்ளார். இதேநேரம் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை ஏற்க ஈராக் சித்தமாக இருப்பதாகவும், அது விதித்த நிபந்தனைகளையும், விதிகளையும், வளைகுடாவில் நிரந்தர அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக ஈராக் ஏற்றுக்கொள்வதாகவும் ஐ. நா. தலைமைச் செயலாளருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## திருமலை இணைப்பு அதிகாரி; பிரிகேடியர் சிறி பீரிஸ்

(திருக்கோணமலை)

பிரிகேடியர் சிறி பீரிஸ் திருகோணமலைப் பாதுகாப்பு இணைப்பு அதிகாரிப் பதவியைக் கடந்த வாரம் பொறுப்பேற்றார்.

மேஜர் ஜெனரல் லக்கி விஜேரட்ண கடந்த ஆண்டு டிசம்பரில் புலிகளின் நிலக் கண்ணிவெடியில் சிக்கி காலமானதைத் தொடர்ந்து பிரிகேடியர் திலக் பறணகம பாதுகாப்பு இணைப்பு அதிகாரியாகப் பதில் கடமைகளை ஆற்றி வந்தார். இவர் இப்போது கொழும்புக்கு மாற்றலாகி உள்ளார்.

நெடைகொமானரிலும் ... லில் எஸ் செல்வ சந்திரன் (வயது 24) எஸ் சிவாகனி (வயது 50), அ தவமணி (வயது 35) ஆகியோர் படுகாயமடைந்தனர். (25), (செ. த. மை)

கோண்டாவிலி-

தாமலிங்கம் (வயது 55) என்பவரும் மேலும் நான்கு பேர் உருத்தெரியாத நிலையில் சிதறிவிட்டதாக் கூறப்படுகிறது. பொ. பவனம் (வயது 30) இ புஸ்பநாதன் (வயது 47), பொ. குகதாஸ் (வயது 18) ஆகியோர் படுகாயமடைந்தனர். இப்பகுதியில் இருந்த பிள்ளையார் கோவில் மற்றும் பொதுமக்களின் பத்து வீடுகள் சேதமடைந்தன (85, க, மு) (செ. த. மை.)

அரியாலையில்

செல்லப்பட்டனர் ஜெயராணி (வயது 23) மகேஸ்வரி (வயது 60) வி. பரமசாமி ஆகியோர் படுகாயமடைந்தனர் இப்பகுதியில் உள்ள நான்கு வீடுகள் சேதமடைந்தன. (க,(மு) (85), (11) (21) (செ. தமை)

20 ஈராக்கிய

இராணுவத்தினரை விஷஊசி ஏற்றிக்கொன்றதாக அவர் குறிப்பிட்டார். இவருக்கு வயது 24 ஆகும்.

உடல்கள் சிதறிய

பிள்ளையார் கோவிலில் வீசிய குண்டு ஒன்றிற்கு பலியாகிய நிரூஜன் என்ற சிறுவன் துண்டு துண்டுகளாக சிதறியதால் அவனது உடலின் சிறு பாகங்கள் பரவலாக எங்கும் சிதறிக் கிடந்ததால் காகங்கள் கொத்தித்தின்ற காட்சி சகிக்க முடியாததாயிருந்தது. இத்தாக்குதலில் இந்த சிறுவனின் இரு சகோதரர்களும் தந்தையும் உயிரிழந்தார்கள். தாய் ஒருவரே மீதமாயுள்ளார். மேலும் நான்கு பேரும் இச் சிறுவனுடன் சிதறிப்போய் விட்டதாகவும் அப் பகுதியில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

அரியாலையில் நடந்த தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் உடல் சிதறிப் போயினர். இவர்கள் இறந்து கிடந்த இடம் இரத்த வெள்ளமாயிருந்த காட்சி படு கோரமானதாக இருந்தது.

சுன்னாகத்தில் அரவிந்தன் என்ற சிறுவனின் தலை சிதறிப்போய் விட்டது.

வேலணையிலும் செபமாலை என்பவரும் உடல் சிதறிப்போய் உயிரிழந்து விட்டதாக அங்கிருந்து எமது நிருபர் தெரிவிக்கிறார். (லோ)

சுன்னாகத்தில்

இத்தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தி. கமலநாதன் (38 வயது, இவரது ஒருவயதுக் குழந்தை க. அரவிந்தன், இவரது தலை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை) இவரது தாயான தி. தனலட்சுமி (வயது 54) ஆகியோரும் கடை உரிமையாளரான சி. செல்வராசா (36 வயது) கடை ஊழியரான மு. கண்ணியப்பு (வயது 60) ஆகியோரே பலியானவர்களாவர்.

இதில் சி. சந்திரசாமி (வயது 55), க. மீனலோஜினி, ச சந்திராதேவி, தம்பிராசா (வயது 35 எஸ். சபநாயகம் (வயது 60), ரா. புஸ்பநாதன், இ. செல்லையா ஆகியோர் உட்பட மேலும் சிலர் சிறுகாயமடைந்தனர்.

(ச) (85, (செ. த. மை)

# ஆயுதப்படையில் இதுவரை 1560 ஆயுதப்படையினர் பலி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்தது. அன்று முதல் முப்படைகளிலும் 1560 பேர் யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர். அல்லது காணாமற்போயுள்ளனர். இந்தத் தகவலைப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

காணாமற் போனவர்கள் அல்லது கொல்லப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

பாதுகாப்புப் படை: 840, பொலிஸ்: 674, கடற்படை: 6, விமானப்படை: 7, விசேட அதிரடிப் படை: 9, ஊர்காவற் படை: 24, யுத்தத்தில் காயப்பட்ட 1309 பேரில் 326 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

## சிப்பாய் தற்கொலை

(புத்தளம்)

புத்தளத்தில் வில்லுவ இராணுவ முகாமில் இராணுவத்தினர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஜி. டி. எச். என். பெரேரா என்ற பெயரையுடைய இவர் கடமையின் போது ரி-81 ரைபிளால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

வீமன்காமத்தில்

பில் ஏற்பட்ட சேதவிபரம் ஏதும் தெரியவரவில்லை.

இதேபோல கடந்த 2ஆம் திகதி காலை 7 மணியளவில் ஆனையிறவு இராணுவத்தினர் மீது அருள் 89 ரக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதிலும் சேதம் ஏதும் தெரியவரவில்லை

எமக்குத்

வில்லை என மறுத்தபோதும்: இராணுவ அதிகாரிகளில் பெரும்பாலனவர்கள் விடுதலைப் புலிகளின் வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையே இது எனத் தாம் கருதுவதாகத் தம்மிடம் தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

மேலும் விடுதலைப்புலிகள் மீது பெரும் தாக்குதல் ஒன்று நடத்த அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா திட்டமிட்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. கொழும்பில் பெரும் அர்ச்சிவை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாண்டிச்சேரி அரசாங்கம கலைக்கப்பட்டதாக அறிவிப்பு

(டெல்லி)

பாண்டிச்சேரி அரசாங்கம் நேற்றுக் கலைக்கப்பட்டது. பாண்டிச்சேரி ஆளுநரின் ஆலோசனையின் பேரிலேயே மேற்படி அரசாங்கம் கலைக்கப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் சுபைதிகான் தெரிவித்துள்ளார்.

தி. மு. க. அரசாங்கம் பதவி நீக்கியதும், ஜனவரி 12முதல் பாண்டிச்சேரி அரசாங்கம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் தாக்குதலுக்கு மூன்று ரெலோ பலி

(மட்டக்களப்பு)

செட்டிப்பாளையம் முகாமிலிருந்து கடந்த இரண்டாம் திகதி இரவு 7-45 மணியளவில் வெளியே வந்த மூன்று ரெலோவின்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் மூன்று ரெலோவினரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

## ரஞ்சனின் பேழையின் மேல் ஜெனரலுக்குரிய அணிகலன்கள்

(கொழும்பு)

கார்க் குண்டுவெடிப்பில் மரணமடைந்த அமைச்சர் ரஞ்சனுக்கு ஜெனரலுக்குரிய சகல மரியாதைகளும் செய்யப்பட்டுள்ளது. ஜெனரலுக்குரிய இராணுவச் சீருடை, தொப்பி, வாள் என்பன சடலம் இருந்த பேழையின் மீது வைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தால் கைதாகிய

# 7,500 தமிழர் பற்றி தகவல் 9 மாத காலமாக இல்லை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 7,500 நபர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தகவல் ஏதுமின்றி காணாமல் போயுள்ளனரென புள்ளி விபரக் கணிப்பீட்டில் இருந்து தெரிய வருகிறது.

கடந்த ஒன்பது மாதங்களாக இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் இவர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் காணாமல் போயுள்ளனர்.

பிரஜைகள்குழு சமாதானக் குழு ஆகியவற்றிற்கு கிடைத்த புகார்கள்மூலமே இவை தொடர்பான புள்ளி விபரங்கள் கிடைத்துள்ளன

மட்டக்களப்பில் 1591, அம்பாறையில் 2,220, திருக்கோணமலையில் 1,500, வடமாகாணத்தில் 1500 எண்ணிக்கையிலானோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தகவல் எதுவும் இல்லாது இருக்கின்றனர்.

மேற்படி விபரம் தொடர்பாக மனித உரிமைஸ்தாபனங்களின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

## கணவாய் கடித்து காயம்

கணவாய் கடித்து தொழிலாளி காயம் இந்தச் சம்பவம் குருநகர் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கணவாய் கடித்ததில் காயமடைந்தவர் பாக் றோட்டைச்சேர்ந்த இ கிறிஸ்ரியான் என்று தெரிவிக்கப்பட்டது.

கணவாய் கடித்ததைப் புதுமையான ஒன்றாகக் கடற்றொழிலாளர்கள் கூறினர். கணவாய் கடிப்பதில்லையாம். (21)

மத்திய வங்கி ஆளுநர்

## கணக்காளர் நாயகத்திற்கு பகிரங்க எச்சரிக்கை

மத்தியவங்கி ஆளுநர் கலாநிதி எச். என். எஸ் கருணத்திலக்கா கணக்காளர் நாயகத்தைப் பகிரங்கமாக எச்சரித்துள்ளார். மத்திய வங்கியின் இரகசிய நிதி அறிக்கையை அவர் எவ்வாறு பத்திரிகைகளுக்கு வெளிப்படுத்த முடியும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் கேட்டுள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் கடந்த வெள்ளியன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பேசும்போது கணக்காளர் நாயகத்தை எச்சரித்தார்.

மத்திய வங்கி கணக்குப் பதிவு ஒழுங்கு முறையையும் வங்கியின கணக்கறிக்கையைக் காரணம்காட்டி கணக்காளர் நாயகம் ஏற்கனவே கண்டித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

இடிவிழுந்து

ரஜனி ஆகிய இருவரும் அண்மையில் இறந்துபோனதாக தகவல் கிடைத்துள்ளது

இவர்களுடன் மேலும் எட்டுப் பேர் மயக்கமடைந்தனர். உயிரிழந்த இருவரும் தாயும் மகளும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அஞ்சலி

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் சடலத்திற்கு புளொட், ஈ. பி. டி. பி. குழுவினர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## சிலை திருட்டு

புத்தளம், வைத்தியசாலை வளவிற்குள் அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த சிறிய ஆலயத்தின் பிள்ளையார்சிலை திருடப்பட்டுள்ளது

நான்கு வருடங்களுக்கு முன்னர் இந்த வைத்தியசாலை வளவிற்குள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பிள்ளையார் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இதே நேரம் புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும் அண்மையில் உடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.